# பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட மோடி ஆட்சி அகற்றப்பட வேண்டும்!

## பெண்ணுரிமை பாதுகாப்பு மாநாட்டில் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

கன்னியாகுமரி, ஜூன் 28-

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் ஜூன் 25 ஞாயிற்றுக் கிழமை அன்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் நடைபெற்ற பாலின நிகர்நிலை சமூகத்தை நோக்கி பெண்ணுரிமை பாதுகாப்பு சிறப்பு மாநாட்டில் கலந்து கொண்டு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

“சரிசமத்தை விட அதிகமான அளவு பெண்கள் ஓர் அரசியல் மேடையில் இருக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். தி.மு.க.வில் மகளிரணி நடத்தக்கூடிய நிகழ்ச்சிகளிலே நாங்கள்தான் மேடையில் பெரும்பான்மை யாக இருப்போம். ஆனால் எல்லா கூட்டங்களிலும் பெண்கள் சரி சமமாக அமரக் கூடிய நிலை வரவேண்டும் என்பதற்காகத்தான் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் 33% இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசிய பி.கே. ஸ்ரீமதி அவர்கள் சொன்னார்கள், ராஜ்யசபாவில் அந்த மசோதாவை எவ்வளவு கஷ்டப்பட்டு நாம் நிறைவேற்றினோம் என்று. ஆனால் இன்றைய ஒன்றிய பா.ஜ.க. அரசு அவர்களின் தேர்தல் அறிக்கையிலேயே மகளிருக்கான இட ஒதுக்கீட்டை நாங்கள் கொண்டுவருவோம், நிறைவேற்றுவோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். ஒவ்வொரு நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு முன்னர், லிஸ்ட் ஆஃப் பிசினஸ் என்ற பட்டியல் வெளியிடுவார்கள். ஆனால் அந்த பட்டியலில் கூட பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை அவர்கள் கொண்டுவந்ததில்லை. இதுகுறித்து பல முறை நாங்கள் குரல் எழுப்பியிருக்கிறோம். ஆனால் அவர்கள் பேசுவதைதான் எல்லாரும் கேட்க வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர, நாம் பேசுவதை அவர்கள் காதிலேயே வாங்குவதில்லை.

### ஒவ்வொரு தளத்திலும் ஒடுக்கப்படுவது பெண்கள்தான்!

எந்த சாதியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும், எந்த இனமாக இருந்தாலும், எந்த பொருளாதார அடுக்கிலே நீங்கள் பிறந்திருந்தாலும் ஒவ்வொரு தளத்திலும் ஒடுக்கப்படுவது பெண்கள்தான். நான் மாற்றமே வரவில்லை என்று சொல்ல மாட்டேன். நம்முடைய பாட்டிகள், அவர்களுடைய அம்மாக்கள், நமது அம்மாக்கள் காலத்திலிருந்து நாம் வெகுதூரம் பயணித்து வந்திருக்கிறோம். பல மாற்றங்களை சந்தித்திருக்கிறோம். நம் தலைமுறையை விட நமது அடுத்த தலைமுறை இன்னமும் இணக்கமான சூழ்நிலையில் இருக்கும் என்ற நம்பிக்கையோடுதான் நாம் இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த மாற்றம் போதுமானதா என்று கேட்டா இல்லை. இங்கு மட்டுமல்ல, உலகில் பல பகுதிகளில் பெண்கள் சரி சமமாக நடத்தப்படும் சூழல் வரவில்லை. இன்றும் பெண்கள் சரிசமமான ஊதியத்துக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றும் பெண்கள் தங்கள் அடிப்படை உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னமும் பெண்கள் கல்வி, வேலை வாய்ப்புக்காக, வேலைக்குப் போகக் கூடிய உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் தாண்டி பெண்கள் இந்த உலகத்தில் பிறப்பதற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் பெண்கள் கருவிலோ, குழந்தையாகவோ கொல்லப் படும் சூழலில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால் நாம் கனவு காணும் மாற்றங்களை இன்னும் அடைந்துவிடவில்லை.

### பெண்களுக்கு வாக்குரிமை!

உலகம் எங்கும் இருக்கும் பெண்கள் வாக்குரிமைக்காக போராடினார்கள், சிறைபட்டார்கள், அடிபட்டார்கள். கொலை கூட செய்யப்பட்டார்கள். ஆனால் எந்த போராட்டமும் இல்லாமல் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது என்றால் அது இங்கே ஜஸ்டிஸ் பார்ட்டி என்னும் நீதிக் கட்சியின் ஆட்சியில்தான்.

யாருமே பெண்ணுரிமை பற்றி பேச முன் வராத காலத்திலே அது தேவையில்லை என்று நினைத்த காலத்திலே தந்தை பெரியார்தான், அந்த பெண்களின் கைகளிலே இருக்கும் விலங்குகளைப் பிடுங்கி விட்டு புத்தகங்களைக் கொடுங்கள் என்று சொன்ன தலைவர்.

பெண்களுக்கு எல்லா உரிமையும் இருக்க வேண்டும். அவளுக்கு லட்சியங்களை கனவுகளை அடைய எது தடையாக இருந்தாலும்.. அது குடும்பமாக இருக்கட்டும், தாய்மையாக இருக்கட்டும், அன்பாக இருக்கட்டும், பாசமாக இருக்கட்டும். அதை உடைத்தெறிய தயங்கக் கூடாது என்று சொல்ல திராணி இருந்த தலைவர் தந்தை பெரியார் அவர்கள். அந்த அடித்தளத்தில் இருந்துதான் நாம் பெண்ணுரிமையை வார்த்தெடுக்க வேண்டும், வளர்த்தெடுக்க வேண்டும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால் பெண்கள் சரிசமமாக நடத்தப்படுகிறார்களா என்ற கேள்வி நம் முன் ஒவ்வொரு நாளும் எழுப்பப்படுகிறது. வேலைக்குப் போகும் இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா, குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்ற கேள்வியை நாம் ஒவ்வொரு நாளும் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் நின்று கொண்டிருக்கிறோம்.

### பெண்களை பாதுகாக்க முடியுமா?

சில ஆண்டுகளுக்கு முன்னால்... எந்த மண்ணுக்காக இந்த ஒன்றிய அரசு போராடிக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்களோ அந்த காஷ்மீர் பகுதியிலே ஒரு குழந்தை ஒரு கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே வேலை செய்பவர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறாள். பல நாட்கள் அங்கே கட்டிப் போடப்பட்டு அடைத்து வைக்கப்பட்ட நிலையிலே இஸ்லாமிய



சமூகத்தைச் சேர்ந்த அந்த பெண் குழந்தையின் தந்தை, ‘நான் எல்லா இடத்திலும் என் குழந்தையை தேடினேன். அந்த கோயிலுக்குள் நான் தேடவில்லை. ஏனென்றால் அது தெய்வத்தின் இடம். அங்கே இப்படியெல்லாம் நடக்கும் என்று என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை’ என்று நம்மையெல்லாம் அதிர செய்யக் கூடிய அளவுக்கு, பெரும்பான்மை இந்துக்களை எல்லாம் அதிரச் செய்யும் அளவுக்கு சகித்துக் கொள்ள முடியாத ஒரு கொடுமை நடைபெறுகிறது. ஆனால் அந்த குற்றத்தை செய்தவர்களை பாதுகாப்பதற்காக ஒன்றிய ஆளுங்கட்சியான பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள் ஊர்வலம் நடத்துகிறார்கள். இவர்கள் பெண்களைப் பாதுகாக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. எந்த இடத்திலும் இவர்கள் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்பவர்கள் கிடையாது.

### இஸ்லாமியர்கள் மீதான துன்புறுத்தல்!

முத்தலாக்குக்கு எதிரான சட்டத்தை கொண்டுவந்து இஸ்லாமிய சகோதரிகளை எல்லாம் நாங்கள் பாதுகாத்துவிடுவோம் என்று சொல்கிறார்கள். நான் இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் எதிர்த்துப் பேசியபோது ஒன்றிய அமைச்சர், ‘ஏன் இஸ்லாமிய சகோதரிகள் மீது உங்களுக்கு அக்கறை இல்லையா?’ என்று என்னைப் பார்த்து கேட்டார். நான் அவர்களிடம் கேட்ட ஒரே கேள்வி... ‘முத்தலாக் சொன்னால் அந்த கணவனை ஓராண்டு சிறையில் அடைக்கவேண்டும் என்று சட்டம் சொல்கிறது. அந்த குடும்பத்தின் நிலை என்ன? அந்த குழந்தைகளை யார் பராமரிப்பது? என்ற கேள்வி உங்களுக்கு எழவில்லையா. அப்போது இந்த நாட்டிலே மற்ற மதங்களில் இருக்கும் சகோதரிகள் மீது ஏன் உங்களுக்கு இல்லை? இந்து சகோதரிகள், கிறிஸ்துவ சகோதரிகள் இதுபோன்ற நிலைக்கு ஆளாக்கப்படு கிறார்கள். இந்த அக்கறை இவர்கள் மீது மட்டுமே ஏன் வருகிறது?’ என்று கேட்டேன்.

அவர்களின் ஒரே நோக்கம் இஸ்லாமியர்களை துன்புறுத்த வேண்டும்., எந்த வகையிலாவது அவர்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வந்து இந்த சமூகத்திலிருந்து ஒதுக்க வேண்டும், ஓரங்கட்ட வேண்டும், அச்சுறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் எடுக்கிறார்கள். எனவே இது பெண்கள் மீதான அக்கறை இல்லை.

ஒரு பெண் தான் என்ன உடை உடுத்துவது என்பதை அவள்தான் தீர்மானிக்க வேண்டும், வேறு யாருக்கும் அந்த உரிமை இல்லை. நீங்கள் குறைவாக உடுத்துகிறீர்களா, மிகையாக உடுத்துகிறீர்களா, புடவை கட்ட வேண்டுமா, ஜீன்ஸ் அணிகிறீர்களா, பர்தா போட்டுக் கொள்கிறீர்களா என்பதை பெண்கள் தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் கர்நாடகாவிலே பர்தாவை போட்டுக் கொண்டு பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் சென்ற சந்தித்த எதிர்வினைகள், வன்முறைகள் என்ன என்பதை நாம் பார்த்தோம்.

அதே நேரத்தில் ஒவ்வொரு முறையும் பெண் மீதான வன்முறை நடக்கும்போது பா.ஜ.க.வில் தலைவர்கள் முன் வைக்கும் கருத்துகளை நாம் பார்த்தோம் என்றால்... பெண்கள் வெளியே வந்தால் இப்படித்தான் ஆகும், பெண்கள் கையில் செல்போன் கொடுத்தால் இப்படித்தான் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக யார் பாதிக்கப் படுகிறார்களோ அவர்களையே குற்றவாளியாக மாற்றக் கூடியவர்கள்தான் ஆளும் பா.ஜ.க.வினர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஓர் அரசியல் அமைப்பு வன்முறையை தன் கையிலே எடுத்துக் கொள்கிறது. மக்களைப் பிரித்தாள் வதற்கான கருத்துகளை தொடர்ந்து முன் வைக்கும் போது அது முதலில் இந்த நாட்டிலே சரி பாதியாக இருக்கும் பெண்களைத்தான் முதலில் பாதிக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

### கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னிலை!

தமிழ்நாடு இன்று கல்வி வளர்ச்சியிலே முன்னணியிலே இருக்கக் கூடிய ஒரு மாநிலம். அதுமட்டுமல்ல பெண்களுக்கான உயர் கல்வியிலே தமிழ்நாட்டில் 72% ஐ நாம் அடைந்திருக்கிறோம். தேசிய சராசரி 24%. இந்த நிலையை அடைவதற்கு நாம் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பல பள்ளிக் கூடங்களை தமிழ்நாட்டிலே உருவாக்கித் தந்தார்கள். பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்து படிக்கக்கூடிய வாய்ப்பை பெற வேண்டும் என்பதற்காக மதிய உணவுத் திட்டத்தையும் தந்தார். அது நிறுத்தப்படவில்லை தொடர்ந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் அதை உண்மையான சத்துணவு திட்டமாக மாற்றி அமைத்தார்கள்.

பெண் கல்வி என்று வரும்போது குடும்பங்களில் ஏதேனும் பிரச்சினை என்றால் முதலில் தடைபடுவது பெண்களின் கல்வியாக தான் இருக்கும். பெண்ணை எப்படியாவது கல்யாணம் செய்து கொடுத்தால் போதும் என்பதே பெற்றோர்களின் எண்ணமாக இருந்தது. பெண்களின் கல்வி தடைப் படக்கூடாது என்பதற்காக அந்தப் பெண்கள் பத்தாவது வரை படித்தால் திருமண உதவித் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்தவர் தலைவர் கலைஞர்.

அந்தப் பெண்கள் அப்படியாவது பத்தாவது படித்துவிட்டு 12வது படித்துவிட்டு உயர்கல்விக்கு போவார்கள் என்பதற்காக இந்த திட்டத்தை கொண்டு வந்தார். அடுத்து பெண்கள் கல்லூரிக்குச் செல்வதில் அவர்களுக்கான கட்டணம் என்பது பிரச்சினை யாக இருந்தது. எனவே பெண்கள் அரசு கல்லூரியில் சேர்ந்தால் அவர்களுக்கு கட்டணம் கிடையாது என்ற திட்டத்தை கொண்டு வந்தோம்.

அதன் பிறகு கல்லூரிகள் ரொம்ப தூரமாக இருந்தால் வீட்டில் இருந்து பெண்களை அனுப்ப மாட்டார்கள். அதனால் அருகிலேயே அரசு கல்லூரிகளை உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். பல சிற்றூர் களுக்கு அருகிலே அரசு கல்லூரிகளை உருவாக்கி அங்கே இருக்கக்கூடிய அடிதட்டு சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களும் பெண்களும் படிக்கக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்து... இன்று பெண்கள் உயர் கல்வியிலே 72 சதத்தை தொட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால்... இப்போது புதிய கல்விக் கொள்கையை கொண்டு வரக்கூடிய ஒன்றிய அரசு, இப்படி உருவாக்கப்பட்ட எல்லா கல்லூரிகளையும் மூடிவிட்டு அதற்கு பதிலாக கல்லூரி வளாகங்களை உருவாக்க வேண்டும்... அந்த வளாகங்களிலே மாணவர்களை கொண்டு வந்து அங்கே படிக்க வைக்க வேண்டும் என்கிறது.

ஆக மறுபடியும் நம் நாட்டில் பெண் கல்வி என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாக மாறிவிடும். இப்படி ஒவ்வொன்றிலும்... கல்வியாக இருக்கட்டும், பெண்களின் பாதுகாப்பாக இருக்கட்டும், அவர் களின் அடிப்படை உரிமைகளாக இருக்கட்டும், அவர்களுக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய இட ஒதுக்கீடாக இருக்கட்டும். இந்த ஒவ்வொன்றிலும் அவர்கள் கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

### பறிக்கப்படும் மாநில உரிமைகள்!

ஒவ்வொரு மசோதாவும் கொண்டு வரப்படும் போது மாநில உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மசோதாவும் கொண்டுவரப்படும் போது சிறுபான்மையினரின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மசோதா கொண்டு வரப்படும் போதும் விவசாயிகளின் உரிமைகள், தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

இன்றைய உலகம் நாம் ஒருவருக்கொருவர் நேரில் சந்தித்து பழகிக் கொள்வதை தாண்டி இணையம் என்ற சைபர் ஸ்பேசுக்குள் சென்று கொண்டிருக்கிறோம். அங்கேயும் பெண்களுக்கு எதிரான எத்தனை வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் ஒன்றிய அரசாங்கம் இன்று வரை பெண்களின் பாதுகாப்புக்காக எதையும் செய்யவில்லை.

இங்கே இருக்கக்கூடிய எல்லார் கையிலும் அலைபேசி இருக்கிறது. கிட்டத்தட்ட நாம் அத்தனை பேருமே சோசியல் மீடியாவில் இயங்கிக் கொண்டிருக்கிறோம். அதை தொடாத யாரும் இல்லை என்ற சூழலிலே அங்கேயும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்... ஒரு கருத்தை பொதுவெளியிலே பெண்கள் பேசுகிறபோது அவர்களுக்கு எதிராக எழக்கூடிய வன்முறைகள் என்ன என்பதை நாம் தொடர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறோம். இந்த மேடையில் இருக்கக்கூடியவர்கள் உட்பட இப்படிப் பட்ட வன்முறைக்கு ஆளாகாதவர்கள் யாரும் இருக்க முடியாது. ஊடகத் துறையை சேர்ந்தவராக இருக்கட்டும், அரசியல்வாதிகளாக இருக்கட்டும் யாராக இருந்தாலும் சமூக வலைத்தளங்களில் பெண்கள் தங்கள் கருத்தை வெளியிடும் போது... இல்லையென்றால் ஒரு படத்தை போட்டால் கூட அவர்களுக்கான பாதுகாப்பு என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறக்கூடிய சூழலிலே நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

தொழில் நுட்பங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மனித மனங்கள் அதற்கு தங்களை தகவமைத்துக் கொள்ளாமல்... இன்னும் வேறொரு காலத்திலேயே சிக்கிக் கொண்டு பெண்களை சமமாக பாவிக்க முடியாமல் அவர்களை எப்படி எதிர்கொள்வது என்று தவித்துக் கொண்டிருக்க கூடிய சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

பெண்கள் வேலைக்குப் போகும் இடங்களில் பாதுகாப்பு இல்லை. தொடர்ந்து பல் வேறு பாலியல் ரீதியான பிரச்சனைகளை அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளக் கூடிய ஒரு சூழலிலே பெண்கள் இன்னும் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கான தடங்களை இன்னும் அவர்கள் அமைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

### மிகப்பெரிய மாறுதல் தேவை!

இந்தப் போராட்டங்கள் சமூகத்துக்கான போராட்டங்களாக, அரசியல் விழிப்புணர்வுக்கான போராட்டங்களாக, அடிப்படையிலே இந்த அரசாங்கம் கையில் எடுக்க வேண்டிய போராட்டங்களாக... புரிந்து கொள்ள வேண்டிய உணர்ந்து கொள்ள வேண்டிய போராட்டங்களாக மாற வேண்டும். பெண்கள் தங்களுடைய உரிமைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். அதை ஓர் அரசியல் இயக்கமாக செய்யவில்லை என்றால் நிச்சயமாக நாம் எதிர்பார்க்கக் கூடிய ஒரு மிகப்பெரிய மாறுதல் இந்த நாட்டிலே வராது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பெண்களுக்காக நாம் தொடர்ந்து போராட வேண்டிய காலகட்டத்தில் நின்று கொண்டிருக்கிறோம். இந்த சூழ்நிலையில் யாருக்கும் தங்கள் கருத்துக்களை வெளிப் படுத்துவதற்கோ பேசுவதற்கோ எழுதுவதற்கோ உரிமைகள் மறுக்கப்படக்கூடிய சூழலிலே... எதிர்க் கட்சிகள், ஊடகங்கள் எல்லாம் அச்சுறுத்தப்படக் கூடிய காலகட்டத்திலே நமக்கான உரிமைகளை பாதுகாக்க வேண்டும். நமது அடுத்த தலைமுறை பெண்களுக்கான உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்றால் வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் மாற்றத்தை ஆட்சி மாற்றத்தை உருவாக்கி காட்ட வேண்டும். இதில் நம்முடைய கடமை இருக்கிறது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், சி.பி.ஐ. (எம்) மாநில செயலாளர் பாலகிருஷ்ணன், கேரள முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் ஸ்ரீமதி டீச்சர், சி.பி.ஐ. (எம்) மத்தியக்குழு உறுப்பினர் வாசுகி, தி.மு.க. மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், சி.பி.ஐ. (எம்) மாவட்ட செயலாளர் செல்லசுவாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## குடியாத்தம் முரசொலி முகவர் ஜி.ஆர்.இளங்கோ இல்ல மணவிழா!

*குடியாத்தம், ஜூன் 28-*

*வேலூர் மாவட்டம் குடியாத்தம் புதுப்பேட்டை என்.கே.சி.தெரு முன்னாள் நகரகூட்டுறவு வங்கி இயக்குநர் நினைவில் வாழும் பி/ஜி.ராசன் மற்றும் குடியாத்தம் முரசொலி முகவர் ஜிஆர் இளங்கோவனின் சகோதரர் நினைவில் வாழும் ஜிஆர். இளஞ்செழியன் மகன் ஐ.அமிழ்தன் - குடியாத்தம் வட்டம் கூட நகரம் கிராமம் எம்.ரமேஷின் புதல்வி ஆர். கயல்விழி திருமண விழா குடியாத்தம்*



*டவுன், ராஜகணபதி நகர், புதிய பேருந்து நிலையம் எதிரில் ஸ்ரீ லஷ்மி ஹயக்ரீவ மஹாலில் நாளை (29.6 2023-வியாழக்கிழமை) நடைபெறுகிறது இன்று (28.6.2023) மாலை வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்வில் மாவட்டச் கழகச் செயலாளர், மாவட்ட பொறுப்பாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் நகர மன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், நகர மன்ற, உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் உடன்பிறப்புகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

---

## கொரோனா தினசரி பாதிப்பு 50க்கும் கீழ் குறைந்தது!

*புதுடெல்லி, ஜூன் 28 -*

*இந்தியாவில் கொரோனா பாதிப்பு நேற்று முன்தினம் 80 ஆக இருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் புதிதாக 47 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகா தாரத் துறை தெரிவித்துள்ளது. கடந்த 20ந் தேதி பாதிப்பு 36 ஆக இருந்தது.*

*அதன் பின்னர் 5 நாட்களுக்கு பிறகு பாதிப்பு நேற்று மீண்டும் 50க்கும் கீழ் குறைந்துள்ளது. இது வரை பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 49 லட்சத்து 93 ஆயிரத்து 999 ஆக உயர்ந்துள்ளது.*

*தொற்று பாதிப்பில் இருந்து நேற்று 62 பேர் உள்பட இதுவரை 4 கோடியே 44 லட்சத்து 60 ஆயிரத்து 441 பேர் குணமடைந்துள்ளனர். தற்போது 1,655 பேர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இது நேற்றை விட 15 குறைவு ஆகும். தொற்று பாதிப்பால் புதிய உயிரிழப்புகள் இல்லை. மொத்த பலி எண்ணிக்கை 5 லட்சத்து 31 ஆயிரத்து 903 ஆக நீடிக்கிறது.*

---

## திருநெல்வேலி தொகுதி கழக மக்களவை உறுப்பினர் சா.ஞானதிரவியம் அவர்களிடம் விளக்கம் கேட்டு

### கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் கடிதம்

திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதி கழக உறுப்பினர் சா.ஞானதிரவியம் அவர்கள், கழக வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் - கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் செயல்படுவதாகவும் தலைமைக் கழகத்திற்கு புகார் வரப்பெற்றுள்ளதால்,

அவரது இச்செயல் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் உள்ளதால், இதுகுறித்த அவரது விளக்கத்தினையும் – செயல்பாடுகளையும் இக்கடிதம் கிடைத்த ஏழு நாட்களுக்குள் தலைமைக் கழகத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிவிக்க வேண்டுமெனவும், அப்படி தெரிவிக்க தவறும் பட்சத்தில், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

‘அண்ணா அறிவாலயம்’
சென்னை 18.
நாள் 26-06-2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், நத்தம், சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த வேலம்பட்டி அ.கந்தசாமி, கொசவபட்டி சூ.மரிய ஆரோக்கியம், பூசாரிபட்டி இரா.உத்தமன், கண்ணமனூர் கு.கனகராஜ், இராகலாபுரம் இரா.சரவணன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

‘அண்ணா அறிவாலயம்’
சென்னை -600 018.
நாள் 27-06-2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---



"ஒரு பார்ப்பனர்
தனது சாதியின் பெயரால்
ஒரு செல்வந்தரை அவமானப்படுத்தினால்,
நான் செல்வந்தர் பக்கம் இருப்பேன்.

அதே செல்வந்தர்
தன்னிடம் வேலை பார்க்கும் தொழிலாளியை துன்பப்படுத்தினால்,
நான் தொழிலாளி பக்கம் இருப்பேன்.

அதே தொழிலாளி
தனது மனைவியைக் கொடுமைப்படுத்தினால்,
நான் அந்த பெண்ணின் பக்கம் இருப்பேன்.

அடிமைத்தனம் ஒழிய வேண்டுமென்பதே
என் குறிக்கோளே தவிர
யார் பக்கம் இருப்பது என்பது அல்ல ! "

**தந்தை பெரியார்**